**தேர்வாணையத் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான வழிமுறைகள் மற்றும் அறிவுரைகள்:**

எச்சரிக்கை:

1. விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் முன்னர் விண்ணப்பத்தில் உள்ள தகவல்களை மாற்றலாம்.
2. நிரந்தரப்பதிவில் தவறான தகவல்கள் இருப்பின் அதனை மாற்றிய பின்னர் விண்ணப்பிக்கலாம். நிரந்தரப்பதிவில் அல்லது தேர்வுக்கான விண்ணப்பத்தில் தவறான தகவல்கள் அளித்திருந்தால் உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன், விண்ணப்பதாரர்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், அவர்கள் தேர்வு எழுதுவதிலிருந்தும் விலக்கி வைக்கப்பட வாய்ப்புள்ளது.
3. விண்ணப்பத்தில் விவரங்களைப் பதிவு செய்து இறுதியாகச் சமர்ப்பித்த பின்னர், விண்ணப்பத்திலுள்ள விவரங்களை மாற்ற இயலாது. எனவே விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிக்கும் முன்னர் அனைத்து விவரங்களும் சரியாக உள்ளனவா என்பதை உறுதி செய்து சமர்ப்பிக்கவும்.
4. விண்ணப்பத்தின் விவரங்களை மாற்றவும் நீக்கவும் வாய்ப்பு இருப்பதால் விண்ணப்பதாரர்கள் தங்களது பயனாளர் ஐடி மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை மற்றவர்களிடம் பகிர வேண்டாம்.
5. விண்ணப்ப விவரங்களை மாற்றக்கோரி பெறப்படும் மின்னஞ்சல் மற்றும் கடிதங்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது.

அறிவுரைகள்:

1. இத்தேர்வுக்கு விண்ணப்பிக்க நிரந்தரப்பதிவு அவசியம். ஏற்கனவே நிரந்தரப்பதிவு செய்திருப்பவர்கள், www.tnpsc.gov.in என்ற இணையப் பக்கத்தில் “Apply Now” என்பதை கிளிக் செய்தவுடன் திரையில் தோன்றும் விண்ணப்பதாரர் உள்நுழைவுப் பக்கத்தில் (Candidate login Page) கோரப்படும் விவரங்களை உள்ளீடு செய்து விண்ணப்பத்திற்குள் நுழையவும்.




2. நீங்கள் நிரந்தரப்பதிவில் மாற்றம் செய்யும் விவரங்கள் தேர்வாணைய அலுவலர்களால் சரிபார்க்கப்படும். அதில் தவறான தகவல் இருப்பின் தங்களது கோரிக்கை நிராகரிக்கப்படுவதுடன், தவறான விவரங்கள் பதிவு செய்யப்பட்ட உங்களது தேர்வுக்கான விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.
3. பின்னர் நீங்கள் விண்ணப்பத்தில் பதிவு செய்த விவரங்கள் அனைத்தும் முற்காட்சி (Preview) பக்கத்தில் தோன்றும். இந்த நிலை வரை நீங்கள் உங்களது விண்ணப்பத்தின் விவரங்களை மாற்றிக்கொள்ளலாம். இவ்விவரங்களை உறுதி செய்து இறுதியாக உங்களது விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பின்னர் நீங்கள் உங்களது விண்ணப்பத்தில்

எவ்வித மாற்றமும் செய்ய இயலாது. மாற்றம் செய்ய கோரி பெறப்படும் மின்னஞ்சல், கடிதம், மனு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது.

4. நீங்கள் உங்களது விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பித்த பின்னர் உங்களுக்கான விண்ணப்ப எண் வழங்கப்படும்.
5. உங்களது விண்ணப்பம் சரியான முறையில் சமர்ப்பிக்கப்பட்டு விண்ணப்ப எண் வழங்கப்பட்டுள்ளதா என்பதை விண்ணப்பதாரர்கள் Dashboard-ல் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
6. விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு விண்ணப்பதாரர்கள் எந்த விவரங்களையும் மாற்ற இயலாது என்பதால் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் முன் அனைத்து விவரங்களும் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
7. விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிக்காமல் இடையிலேயே விட்டுச்செல்லும் விண்ணப்பங்கள் நிறைவான விண்ணப்பங்களாக கருதப்பட மாட்டாது. அவர்கள் தேர்வுக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.